சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை :- **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.நி.ம.எண்.01/2026**

**இன்**

**அசல் வழக்கு எண்.229/2018**

ராணி

.... மனுதாரர்/3 ம் பிரதிவாதி

// **எதிராக** //

1. புஷ்பலதா
2. ராசுகுமார்
3. பிரகாஷ்
4. சத்தியஸ்ரீ

.... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 23.03.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/3 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.இராமஜெயம்,எம்.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.காந்தி,பி.காம்.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மேற்படி வழக்கில் மனுவில் கண்ட ஆவணங்களை கோப்புக்கு எடுத்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/3 ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்:-**



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.21 17:00:45 +0530

(i) தான் மேற்படி மனுவில் மனுதாரர் /தாவாவில் 3-ம் பிரதிவாதி என்றும், மேற்படி வழக்கில் தன்னுடைய தரப்பில் விசாரனைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தன் தரப்பில் சில முக்கிய ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஆகும் என்றும், கனம் நீதிமன்றம் குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை கோப்புக்கு எடுக்க வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் தன் தரப்பு உண்மை தன்மையை கனம் நீதிமன்றத்திற்கு நிரூபனம் செய்ய உகந்த ஆவணங்கள் ஆகும் என்றும், ஆகவே கனம் கோர்டாரவர்கள் கிருபை செய்து இத்துடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை கோப்புக்கு எடுத்து உத்திரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாயும் நியாயமாயும் உள்ளது இல்லையேல் தனக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்பட்டுவிடும் என வேண்டுகின்றேன் என்றும் மனுதாரர்/3 ம் பிரதிவாதி தனது மனுவில் கூறியுள்ளார்.

3. <u>1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்</u> :-

(i) மனுதாரரின் மனு பொய், மோசம், சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடியாக வேண்டியது. இந்த எதிர்மனுதாரர் தான் இங்கு யுக்தமாய் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

(ii) மனு அபிடவிட்டில் கண்ட சங்கதிகள் சரியல்ல. மனுதாரர் தரப்பில் சில முக்கிய ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்பதும் மேற்படி ஆவணங்களை குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களை கோப்புக்கு எடுக்க வேண்டியது அவசியம் என்பதும் சரியல்ல.

(iii) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள 1, 2 ஆவணங்கள் ஏற்கனவே தாவாவில்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.21 17:00:52 +0530

எதிர்மனுதாரர் /வாதிகள் தரப்பில் EX8 மற்றும் EX9 ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுவில் கண்ட 3,4 ஆவணங்கள் தாவாவிற்கு பின்னிட்டு மனுதாரரும் அவரது கணவர் 4-ம் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்து மோசடியாக தயார் செய்துள்ள ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு அவசியமற்ற ஆவணங்களாகும். தாவாவில் மனுதாரருக்கு வெற்றி வாய்ப்பு இல்லாததால் மோசடியாக தாவா சொத்தை குறித்து வில்லங்க ஆவணங்களை ஏற்படுத்தி தாவாவை தொடர்ந்து நடத்தவிடாமல் எதிர்மனுதாரர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் இடையூறுகள் ஏற்படுத்த வேண்டுமென்ற தீய எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளார். இம்மனு அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். எனவே கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u> :-**

5. மேற்படி வழக்கில் மனுவில் கண்ட ஆவணங்களை கோப்புக்கு எடுத்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

6. மனுதாரர்கள்/3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, பிரமாண வாக்குமூலம், பதிலுரை, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/3ம் பிரதிவாதி



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.04.21 17:00:58 +0530

தான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், மேற்படி வழக்கில் தன்னுடைய தரப்பில் விசாரனைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தன் தரப்பில் சில முக்கிய ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஆகும் என்றும், கனம் நீதிமன்றம் குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை கோப்புக்கு எடுக்க வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் தன் தரப்பு உண்மை தன்மையை கனம் நீதிமன்றத்திற்கு நிரூபனம் செய்ய உகந்த ஆவணங்கள் ஆகும் என்றும், ஆகவே கனம் கோர்டாரவர்கள் கிருபை செய்து இத்துடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை கோப்புக்கு எடுத்து உத்திரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாயும் நியாயமாயும் உள்ளது இல்லையேல் தனக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

**7.** எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள 1, 2 ஆவணங்கள் ஏற்கனவே தாவாவில் எதிர்மனுதாரர் /வாதிகள் தரப்பில் EX8 மற்றும் EX9 ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் மனுவில் கண்ட 3,4 ஆவணங்கள் தாவாவிற்கு பின்னிட்டு மனுதாரரும் அவரது கணவர் 4-ம் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்து மோசடியாக தயார் செய்துள்ள ஆவணங்களாகும் என்றும், மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு அவசியமற்ற ஆவணங்களாகும் என்றும், தாவாவில் மனுதாரருக்கு வெற்றி வாய்ப்பு இல்லாததால் மோசடியாக தாவா சொத்தை குறித்து வில்லங்க ஆவணங்களை ஏற்படுத்தி தாவாவை தொடர்ந்து நடத்தவிடாமல் எதிர்மனுதாரர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் இடையூறுகள் ஏற்படுத்த வேண்டுமென்ற தீய எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், இம்மனு அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.21 17:01:00 +0530

அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**8.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் ஆவண எண்.3527/2018 கிரையப்பத்திரம் Null and void என விளம்புகை செய்ய கோரியும் எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/3ம் பிரதிவாதி தற்போது கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்து அதனை ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள 1, 2 ஆவணங்கள் ஏற்கனவே தாவாவில் எதிர்மனுதாரர்/வாதிகள் தரப்பில் EX8 மற்றும் EX9 ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் மனுவில் கண்ட 3,4 ஆவணங்கள் தாவாவிற்கு பின்னிட்டு மனுதாரரும் அவரது கணவர் 4-ம் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்து மோசடியாக தயார் செய்துள்ள ஆவணங்களாகும் என்றும், மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு அவசியமற்ற ஆவணங்களாகும் என்றும் கூறியுள்ளார். வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது இந்த மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 1வது ஆவணம் 23.08.2018ம் தேதியிட்ட 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள தாவா சொத்தின் கிரைய ஆவணம் ஏற்கனவே வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது ச.எண்.46/1ல் சடைய கவுண்டர் மகன் சின்னன்னன் கவுண்டர் என்பவர் பெயரில் உள்ள பட்டா எண்.14 ஆகும். ஆனால் தற்போது மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 2 வது ஆவணம் இளங்கோ மனைவி ராணியான 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா ஆகும். தற்போது மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 2 முதல் 4 வரையிலான ஆவணங்கள் வழக்கில் பெற்று குறியீடு செய்யும் போது தான் அது



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.21 17:01:03 +0530

வழக்கிற்கு தொடர்புடையதா இல்லையா என்பதை வழக்கில் தீர்மானிக்க முடியும். தற்போதைய நிலையிலேயே அந்த ஆவணங்கள் தொடர்புடையது இல்லை என எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 2 முதல் 4 வரையிலான ஆவணங்களை இந்த வழக்கில் பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக**, மேற்படி வழக்கில் மனுவில் கண்ட 2 முதல் 4 வரையிலான ஆவணங்களை மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கில் பெற்றுக்கொள்ள அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.21 17:01:07 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** : -

-- இல்லை -

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.21 17:01:09 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.